*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385 (Print)
*Volume 3, Issue 2, April– June 2016* ISSN 2394-6393 (Online)

# ஈழத்து இனப்பிரச்சினையும் நாடகமும் - தேடலுக்கான தொடக்கம்

S. ஜெயப்பிராகாஷ்.
*முனைவர்பட்ட ஆய்வாளர், நிகழ்கலைத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605 014.*
*jeyaprakash316@gmail.com*

**முன்னுரை**: ஈழத்தில் ஏற்பட்ட இனப்பிரச்சினை அங்கு தோன்றிய பல்வேறு கலைகளின் உள்ளடக்கமாக அமையப் பெற்றிருந்தன. இவ்வுள்ளடக்கத்தை நாடகம் எவ்வாறு பெற்றிருந்தது அல்லது நாடகம் இப்பிரச்சினையை எவ்வாறு கூற முற்பட்டது, என்பது பற்றி ஒரு முற்குறிப்புரையாக அமையப் பெறுகின்றது.

இலக்கியம், நாடகம், வில்லுப்பட்டு, இசை, நடனம், ஓவியம், சிற்பம், போன்ற கலைவடிவங்கள் தங்களது வடிவத்தை அவ்வாறே வைத்துக்கொண்டு அதன் உள்ளடக் கத்தில் மாற்றத்தினை மேற்கொண்டு வளரும் தன்மை உடையன.

ஈழத்தில் இக்கலைவடிவங்கள் தமிழருடைய பண்பாட்டைத் தன்னுடைய பாடுபொருளாகக் கொண்டமைந் தவையாகக் காணப்படுகின்ற அதேகணம் தன்னுடைய வடிவத்தையும் தனக்குள்ளே வைத்து வளர்ந்து வந்துள்ளது. இலங்கையில் தசாப்தங்களுக்குத் தசாப்தம் அரசியல் அதிகார மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. அரசியற் சிம்மா சனத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தமது இருக்கையைப் பதிகை செய்து வந்தனர். தமது அதிகார ஆசைகாரணத்தால் தம்மை அச்சிம்மாசனத்தில் இரண்டாவது முறையாகத் தக்கவைத்துக் கொள்வதற்குப் பல கைங்கரி யங்களை மேற்கொண்டனர். இதனால் அவர்களது தனிப்பட்ட தன் இனத்தின் ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்காக எடுத்த நடவடிக்கை ஈழத்தில் கலைவடிகவங்களையும் வெகுவாகப் பாதித்தது.

ஒரு நாட்டினுடைய அரசியலே அந்நாட்டின் கலைகளிலும் பிரதிபலிக்கும். அரசியல் செயற்பாட்டால் மக்கள் படுகின்ற சிரமம், மக்கள் யாருடனும் பேசமுடியாத சந்தர்ப்பத்தில் கலைகள் அதனைத் தன்னுள் வைத்து மக்களுக்கு உணர்த்தும். ஈழத்து நாடகக் கலையும் ஈழத்து மக்களின் மனநிலையை அவ்வப்போது பறைசாற்றிய வண்ணம் தோற்றம் பெற்றது. ஈழத்து நாடக வரலாற்றை நோக்கும் போது இது தெரியவரும்.

நாடக வரலாறு என்பது நாடகத்தினுடைய வரலாறு என்று நோக்குவது தவறு. மாறாக நாடகம் எழுதப்பட்ட கால, சூழல், இடம் என்பவற்றை மனதிற் கொண்டு அதன் சமூக நிகழ்வுகளை தெளிவாக அறிந்து, அந்நிலை கொண்டு நோக்குதல் வேண்டும். இந்நிலையில் ஈழத்து இலக்கிய வரலாற்றுடன் தொடர்புடைய செந்தரத்தன்மையுடையதாக நாடக வரலாற்றைப் பார்க்க வேண்டும்.

கலை வடிவத்திற்கும் மக்கள் கூட்டத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவாகும் போது அக்கலைவடிவத்தின் ‘வரல் ஆறு’ பற்றி அறிவு அவசியமாகின்றது. ஒரு சமூகக் குழு தன்னுணர்வுடன் தொழிற்படுகின்ற பெழுது தான் வரலாற்றறை நாடுகின்றது. ஒரு கலைவடிவமானது ஒரு மக்களின் உணர் நிலையில் செயற்படும் பொதுதான் அம்மக்களின் கலை வரலாறு தோன்ற வேண்டிய தேவை ஏற்படுகின்ற தென்ற இலக்கிய வழி உண்மை புலனாகும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் தேசிய மட்டத்திலும் தமிழ் கூறும் உலக மட்டத்திலும் அதன் தனித்துவத்தை அறிந்து கொள்வதற்கும் இரு கலை வடிவங்கள் துணை செய்தன. ஒன்று இலக்கியம் மற்றையது நிகழ்த்துகலைகள். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சமூக உருவாக்கத்தில் இலக்கியம் பெறும் இடத்தினை இலங்கையில் தோன்றிய, தோன்றும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

உருவம், பொருள், ரசனை, பயில்முறை வேறுபாடுகளைக் கொண்ட இலக்கியமும் நாடகமும் இருவேறு கலை வடிவங்கள் ஆகும். இவ்விரு கலைகளின் வரலாற்றையும் ஒரே அனுகுமுறை கொண்டு நோக்க முடியாது. இன்றைய உலகில் நாடகம் ஜநநாயகத் தன்மை கொண்டது. குறிப்பிட்ட கலைவடிவத்தின் வரலாறு அக்கலை வடிவத்தினை பயன்படுத்திய அக்கலை வடிவம் பிரதிபலித்த சமூக வட்டத்தினதும் அவ்வட்டத்தினது அகற்சி குறுக்கம் பற்றியதாகவும் இருக்கும்.

ஈழத்து இனப்பிரச்சினை மக்களின் ஒரு பிரச்சினை மட்டுமல்ல அவர்களினுடைய வாழ்வியல் இருப்பு பற்றிய விடயமாகவே அமைந்திருந்ததை அந்நாடகம் பேசிய பொருள் பற்றி அறிந்து கொள்வதன் மூலம் தெரிந்த கொள்ளலாம்.

நாடகங்கள் மனிதனுடைய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டவை. எந்த நாடகமாயினும் அது ஓவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் படுகின்ற முரண்பாடு மற்றும் மோதல்களைத்தான் பிரதிபலிக்கின்றது.

நாடகம் சமூகத்தினுடையதும் தனிமனிதனுடையதும் உள்ள பிரச்சினைகளைத்தான் காட்டும். மனிதனுடைய பிரச்சினை பற்றி ஒரு வகையான பார்வையுடன் பார்த்து அதை உணர்ந்து கொள்வதும் ஆகும். பிரச்சினையை விவாதித்து அதற்குரிய தீர்வுகளைக் காட்டுவதல்ல நாடகம். பிரச்சினை என்ன என்று உணரவைப்பதும், பிரச்சினைகளை மனதுள் வாங்கி வாழ்க்கை நடத்துவதும் தான் நாடகம் என்று பேர.சே.ராமானுஜம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இந்நிலையில் இனப்பிரச்சினை ஆழமான நாடகத்தை உருவாக்கம் செய்யும். இனப்பிரச்சினை எனும் பொழுதே அதை ஒரு அரசியல் நாடகமாகப் பாக்கின்ற தன்மை உண்டு. அதில் ஒரு அரசியல் கலந்தாய்வுக்கான பொருள் இருக்கும். ஆனால் அது அரசியல் நாடகம் இல்லை. அரசியல் நாடகம் என்பது வேறு.

இலங்கைப் பிரச்சினைகளைச் சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது. நேரடியாகச் சொல்ல முடியாத போது நாடகம் போன்ற கலை வடிவங்களின் மூலம் சில அடிப்படை உண்மைகளை சமூகத்திற்கு சொல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது. உண்மைகளை மட்டுமல்ல அந்த உண்மைகளின் பின்னனியில் மனிதன் எவ்வாறு வாழ்கின்றான் என்ற வாழ்க்கை முறைமையை தெளிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அந்தத் தேவை காரணமாக எழுந்ததுதான் நாடகம். அது அரசியல் காரணத்துக்காக எழுந்தவை அல்ல.

சமுதாயத்தில் உள்ள ஆழமான பிரச்சினைகளை ஆழ்ந்து நோக்கும் போதும், மேல் எழுந்த வாரியாகப் நோக்கும் போதும் அங்கிருக்கும் சூழ் நிலைகளினால் அதை அரசியல் பார்வையாக பார்க்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஆனால் அது அரசியல் அன்று. அது மனித வாழ்வு பற்றிய மற்றும் மனித இருப்புப் பற்றிய போராட்டமாகத்தான் அமைகின்றது.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தேசிய தனித்துவத்தை நாடகம் என்னும் கலைவடிவம் வெளிக்காட்டி உள்ளது. உண்மையில் நாடகம் என்னும்

கலைவடிவம் மூலம் தேசியத் தனித்துவம் நிறுவப்பட்டுள்ளது.

அந்நாடகங்கள் பெரும் கருத்துக்களை உள்ளடக் கியதாக இருக்க வேண்டும் என்பதல்ல. சான்றாக காளிதாசன், பாஷ போன்ற மகாகவிகள் எழுதிய நாடகம் போன்றவை அல்ல. மாறாக ஈழத்தில் இருக்கின்ற பிரச்சிகைளை மக்களுக்கு தெளிவாக உணர்த்துவதாக உள்ளன. மக்களுக்கு அவை புரியாமல் இல்லை.

அரசியல் என்னும் வார்த்தைகளைப் பயன்படுத்தும் போது நாம் கட்சி அரசியலை மனதில் வைத்துக்கொள்ளக் கூடாது. கட்சி அரசியலை மனதில் வைத்துக் கொண்டால் அது அரசியல் நாடகம் அல்ல. அது ஒரு கட்சிக்கு சார்பான பிரசார நாடகமாகத்தான் இருக்கும்.

பலம் இழந்து வரும் சமூகம் ஒரு குறிப்பிட்ட மொழியை சார்ந்தவர்களாகவோ இனத்தைச் சார்ந்தவர் களாகவோ இருந்தால் அது இனப்பிரச்சினையாக மாறும். அந்தப் போராட்டத்தை நடத்துபவர்கள் பல முறையான உத்திகளை கையாழுவார். அதை ஆதரிப்பவர்கள் எல்லாம் அந்த அமைப்புக்களாக மாறி விடுகின்றார்கள். இந்த அமைப்புக்கு சார்பாக நாடகம் போடப்பட்டால் அது கட்சி நாடகமாய்ப் போகும். இந்த அமைப்பையும் தாண்டி பொதுவான பிரச்சினைக்கு போகும்பொது அது இனப்பிர ச்சிணை நாடகமாகும். இனப்பிரச்சினையை வெளிப்படுத்துவது என்னும்பொது அங்கு மற்ற இனத்தை எதிர்த்துச சொல்வதாக அமையாமல் தங்களுடைய இனத் துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை சொல்வதாக அமைகின்றது.

ஈழத்தைப் பெறுத்தளவில் கட்சி நாடகத்தை விட இனத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை வெளிப்படுத்தும் நாடகங்கள் இலங்கை சுகந்திரம் அடைந்த காலம் முதல் மேடை ஏற்றப்பட்டு வந்துள்ளது.

இந்தவகையான முரண்பாடுகளைக் உள்ளடக் கமாகக் கொண்டு நாடகம் வந்திருக்கிறது. ஈழத்து இனப்பிரச்சினை களைக் கொண்டு, ஈழத்திலும், ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்த நாடுகளுக்கு சென்றவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளிலும், இந்தியாவின் தமிழ் பேசும் மாநிலமான தமிழ் நாட்டிலும் ஈழத்து இனப்பிரச்னைகளை உள்ளடக்கமாகக் கொண்டு நாடகங்களை மேடையேற்றி ஈழத்து இனப்பிரச்சினை வெளிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான பிரச்னைகள் மேற்கத்தைய நாடகக் கோட்பாடுகள் வளர துணைசெய்தன. ஆழமான பிரச்சினை இருக்கின்ற பொழுது, இந்த ஆழமான பிரச்சினையை, அந்த அளவிலே நாடகம் என்ற ஊடகமாகப் பார்க்காமல் நாடகம் என்ற கலை மூலமாகப் பார்கின்ற பொழுதுதான் நாடகக் கோட்பாடு வரும்.

சமூகப் பிரச்சினைகளை முன்வைத்துக் கொண்டு வருகின்ற நாடகம் வெறும் தொடர்புபடும் ஊடாகமாக அல்லாமல், அந்த சமயத்தில் நடக்கின்ற விடயத்தை மாத்திரம் சொல்லிக் கொண்டு போகின்றதாக அல்லாமல், பிற்காலத்தில் வருகின்ற பொழுது நாடக இலக்கியத்தின் வடிவமாக உயிர் பெற வேண்டும் என்றால், அது வெறும் நாடகம் அல்லாமல் கோட்பாட்டுப் பின்னியோடு வளரவேண்டும்.அப்பொதுதான் கலைக்கோட்பாடு வளரும்.

இவ்வாறு வருகின்ற பொழுது பிரைக்ட், சாமுவேல் பக்கட், கரால் பிரின்டர் போன்றவர்கள் நாடகத்தினுடைய அடிப்படையான விடயத்தையே மறுதலிக்கின்றார்கள், கேலி செய்தார்கள்.

நாடகத்தினுடைய நோக்கமாவது அதைப் பார்க்கும்போது அதில் மெய் மறந்து மூழ்கி மகிழ்வதன்று. நாடகத்தினுடைய கோட்பாடு அப்படி இருக்க முடியாது. நாடகம் சிந்திக்க வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பிரெகட் அரிஸ்டாலின் தன்மையற்ற ஒரு புதிய நாடக அழகியலை முன்வைத்தார். அதுவே காவியப்பாணி நாடகக்கலை. இதில் முக்கிய தன்மை என்னவென்றால் பார்வையாளரின் உணர்ச்சியை விடவும் ஆராயும் அறிவையே பெற்றிருக்க வேண்டும் என்றிருந்தது.

ஆகவே மன ஈர்ப்புக்குள்ளே நாடகத்தை அடக்காமல் அந்த ஈர்ப்புக்கு இடையில் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து எங்கெல்லாம் மன ஈர்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் ஈர்ப்பை உடைக்கின்ற உத்தியைக் கையாண்டார்.

பிரக்டினுடைய ஏலியநேசன் (alienation) என்பது ஒதுக்கப்படுவதல்ல அல்லது அந்நியமாதல் அல்ல அர்த்தம். எங்கெல்லாம் மனம் ஈர்க்கின்றதோ அல்லது மனம் ஈடுபாடு அடைகின்றதோ அங்கே சற்று விலகி நின்று பார்க்கக்கூடிய ஒரு சிந்தனைச் செயலைக் குறிப்பட்டார். நாடகத்தின் எந்தெந்தக் கூறுகள் எல்லாம் ஈடுபாட்டை அடையக்கூடிய நிலைமையை கொண்டு வருகின்றதோ அதை ஈடுபடுத்தி அதை உடைப்பார். அந்நியப்படுத்துவதற்கு அல்லது ஒதுக்குவதற்கு ஏதோ ஒன்று வேண்டும். அதற்கு சில விடயங்களை அவர் சொல்கின்றார்.

சமுதாயத்தில் புதைந்து மறைந்து கிடக்கும் முரண்பாடுகளை எல்லாம் அரங்கக் கலையின் சமூக செயற்பாட்டை வலியுறுத்தி நிற்பதாகும். இப்பாங்கு வாழ்க்கையின் நகல்களை பார்த்துச் சுவைத்துக் கொண்டு இருப்பதற்குப் பதிலாக நிவழ்வுகளை சர்ச்சைச் குரியவைகளாக்கி சில மனப்பாங்குகளை தனதாக்கிக் கொண்டு சில சமூக மாற்றத்திற்கான, சமூகக் கல்வித் தளமாக அரங்கு பயன்பட வேண்டும் என்பது பிரைக்டின் கொள்கை.

பிரைக்ட் கவித்துவ உண்மைப் புலப்பாட்டால் சமூக அரசியல் உணர்வைத்தாண்டி தனது ஆளுமையின் ஆளமான தளங்களை வெளிக்கொணர்ந்த அபத்த நாடகங்களின் முன்னனி ஆசிரியர்களில் ஒருவர் என்னும் மார்டின் எஸ்லிலின் கூற்று கவனிக்கத்தக்கது.

பிரகட் போன்றோர்கள் அடிப்படையில் சமுதாயப் பிரச்னைகளைப் பார்த்தார்கள். அந்தப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கே கொமினிசக் (communism) கோட்பாட்டினை எடுத்துக் கொண்டார்கள். இவ்வளவுக்கும் அவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர். பிற்காலத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. அந்த மாற்றம் கட்சி அரசியலால் ஏற்பட்டது.

மனித அறிவின் வளர்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானமும் தொழில் நுட்ப வளர்ச்சியும் அழிவுச் சாதனங்களின் களஞ்சியத்தை நிறப்புவதாக அமைந்திருக்கும் போது அதன் பின்னனியில் இவை தந்த வாழ்க்கை வசதிகளுக்கு என்ன பொருளோ நிச்சயமோ இருக்க இயலும் என்பது இரண்டாவது மாக யுத்தம் எழுப்பிய கேள்விகளாகும். கலை இலக்கியச் சிறப்பும் விஞ்ஞான முன்னேற்றமும் தொழில்நுட்ப வளர்ச்சியும் உயர்ந்த சமுதாயக் கொள்கைகளும் அணுகுண்டால் தாக்கப்பட்டு முண்டங்களாகப் பிறந்து வளர்ந்து மடியும் குழந்தைகளுக்கு எத்தகைய அர்த்தத்தை தரஇயலும். இது அபத்த நாடகத்திற்கு வித்திட்டது. இந்நிலையிலேயே இன்றைய இலங்கைத்தமிழ் அரசியல் நடைபெற்று வருகின்றது.

அபத்த (Absurd) நாடகத்தில் பெரிய கேள்விக் குறியை வைத்தார்கள். மனிதனின் விஞ்ஞான முன்னேற்றம், அறிவியல் முன்னேற்றம் வந்தவுடனே, அது கடைசியில் ஜப்பானின் ஹிரோஷிமா நாகசாகிமேல (atom bomb) அனுகுண்டை போடுவதுதான் நோக்கம் என்றால், இது முன்னேற்றமா? கேலிக்குரியதா?. இதைத்தான் அபத்தம் என்றார்கள்.

- முன்னேற்றம் எல்லாமே அர்த்தமற்ற தாக இருக்கின்றது. வாழ்க்கையே அர்த்தமற்றதாகப் போய்விட்டதே என்ற எண்ணம் எல்லோருக்கும் வந்தவுடனே, பக்கட் (Samuel Beckett) ஒருபக்கத்தில் ஐனஸ்கோ ஒருபக்கத்தில், பிரகட் ஒரு பக்கத்தில் என்று அவர்களாகவே தமது நாடகத்தை ஆரம்பித் தார்கள். இவர்களுக்குள் யாருக்குமே தொடர்பே கிடையாது. அது ஏற்பட்டதற்கு காரணம் பிரச்சினை. பெரிய முன்னேற்றம் என்று சொல்கின்ற தன்மைதான் பிரச்சினை.
- இன்று இலங்கை அரசியலில் சொல்லப்படும் அபிவிருத்தி என்னும் சொல் மக்களின் வாழ்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதென்றால், உலக மகா யுத்தின் விளைவின் தாக்கத்தையே ஆகும். உலகம் பூராவும் பரவி இருக்கின்ற இலங்கைத் தமிழர்களின் நிலைமையும் அபத்தத்துக்குள்ளே சென்று

நிற்கின்றது. இலங்கை அதிகார கதிரையின் இடத்தில் அவர் வந்தால் எங்கள் வாழ்வு சிறக்கும் என்று அன்றிலிருந்து தேர்தலில் தலைவர்களுக்கு வாக்கழிக்கப்படுகின்றது. அது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த அபத்தம் தொடர்ந்தும் இருந்துகொண்டு இருக்குமா?....

இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை இவ்வாறு நோக்கும் பொழுது சில முக்கிய விடயங்களைக் கண்டு கொள்ளலாம். பேராசிரியர் கணபதிப்பிள்ளை காலம் முதல் நாடக நிகழ்த்துகையை பார்க்கும்போது இனப்பிரச்சினையும் தமிழ் நாடகத்தின் நிலையும் ஈழத்து தமிழ் மக்களின் அவலமும் புலப்படும். இ.முருகையன், குழந்தை ம.சண்முகலிங்கம், கோகிலா மகேந்திரன், க.சிதம்பரநாதன், ரதீதரன், தேவாநந் போன்ற இன்னும் பலர் ஈழத்தமிழ் மக்களின் அவலத்தை வெளிப்படுத்தும் நாடகங்களை மேடையேற்றியுள்ளனர்.

இந்நாடகம் என்னும் கலைவடிவம் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தேசிய தனித்துவத்தை வெளிக்காட்டியுள்ளதுடன் நிறுவியும் உள்ளது என்று சொல்லலாம். இவ்விடயங்களை உண்ணிப்பாக நோக்கும் பொழுதுதான் இலங்கைத் தமிழ் நாடக அரங்க வரலாறு தேன்றுகின்றது.

இதில் இருந்து ஈழத்து நாடகம் ஈழத்து தமிழரின் மன அழுத்தங்களை தெளிவாக வெளிப்படுத்திய கலை வடிவமாக அமைகின்றது. மேலும் ஈழத்து நவீன நாடக மரபை சற்று மேலோட்டமாக பார்ப்பதுடன் அதில் இனப்பிரச்சினை சார்ந்த நாடக வடிவம் தோற்றம் பெறுமிடம், அதன் உச்ச நிலைப்பாடுகள் என்பனவற்றை அறிய முடிகின்றது.

## பயன்பட்ட நூல்கள்

[1] பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2005

[2] பேராசிரியர கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம்: வரலாற்றுப் புரிதலை நோக்கி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011

[3] பேராசிரியர கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் இலக்கிய வரலாறு: வரலாற்றெழுதியல் ஆய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010

[4] பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011

[5] பேராசிரியர கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1994